செ.வெ.எண்.07 நாள்.05.12.2017.

திருநெல்வேலியில் பாண்டியன் கிராம வங்கி மாபெரும் கடன் வழங்கும் விழாவில்
551 பயனாளிகளுக்கு ரூ.600.38 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளை
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி, வண்ணார்பேட்டை எப்எக்ஸ் பொறியியல் கல்லூரி கூட்ட அரங்கில், பாண்டியன் கிராம வங்கியின் சார்பில் மாபெரும் கடன் வழங்கும் விழா இன்று (05.12.2017) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, 551 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 38 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு கடனுதவிகளை வழங்கினார்.

விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில், பாண்டியன் கிராம வங்கியின் மூலம் மாபெரும் கடனுதவி இன்று வழங்கப்படுகிறது. இது கடன் வழங்கும் முகாமாக இல்லாமல் கந்து வட்டி பிரச்சனையிலிருந்து மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சியாக உள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கடனுதவி வேண்டுபவர்கள் வங்கிகளின் மூலமே கடனுதவிகளை பெற முயற்சிக்க வேண்டும். குறிப்பாக, வங்கி கணக்குகளை அவசியம் தொடங்க வேண்டும். பணம் ஒவ்வொருவருக்கும் முக்கிய தேவையாகும். பல்வேறு தொழில்கள் செய்ய, கல்விக்கடன் போன்ற பல்வேறு அவசிய தேவைகளுக்கு வங்கிகளின் மூலமே கடன் பெற வேண்டும். வங்கிகளில் பல்வேறு நிபந்தனைகள் மற்றும் சான்றிதழ்கள், பத்திரங்கள் கேட்பார்கள் என தயங்கி, தனியாரிடம் வட்டிக்கு கடன் பெறுவதால் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். நீங்கள் வங்கிகளுக்கு நேரடியாக சென்று கடன்பெற முயற்சிக்க வேண்டும். ரூபாய் ஒரு இலட்சம் வரை பிணையமின்றி வங்கி கடன் வழங்கப்படுகிறது. சுயஉதவிக் குழுவினர் தொழில்கள் செய்ய வங்கிகள் மூலமே கடன்பெற வேண்டும். சேமிப்பு தொகையினை முறையாக வங்கிகளில் டெபாசிட் செய்ய வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் 20 தேசிய வங்கிகளின் பல்வேறு கிளைகள் உள்ளது. உங்களது தேவைக்கேற்ப வங்கிகள் மூலம் பணம் பெறுவதால் கந்து வட்டி பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும். அரசின் சார்பிலும், மாவட்ட தொழில் மையம், தாட்கோ, சிறுபான்மையினர் நலன் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. கந்து வட்டிக்கு பணம் பெறாமல் இவைகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இவ்விழாவில், பாண்டியன் கிராம வங்கி பெருந்தலைவர் திரு.ந.ரவிச்சந்திரன், சென்னை நபார்டு முதன்மை பொது மேலாளர் திரு.ஜே.நாகூர் அலி ஜின்னா, பாண்டியன் கிராம வங்கி மண்டல மேலாளர் திரு.அ.சிதம்பரம், பொது மேலாளர் திரு.எஸ்.கருப்பையா, பாண்டியன் கிராம வங்கி நிதிசார் கல்வி ஆலோசகர் திரு.ஆர்.மகாலிங்கம் மற்றும் வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.